உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] | நள௵ மாசி௴—1917௵ பிப்ரவரி௴ | [இதழ் 2

## சைவம்.

திருவி னாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்திலுயிர்க் கெலாம்
கருவ னாகி முளைத்தவன் காணாரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே.

---

## சிவஞானபோதம்.

### இரண்டாஞ்சூத்திரம்—முதலதிகரணம்.

(11-வது பக்கத்தொடர்ச்சி.)

### உதாரண வெண்பா.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணறா
ளத்துவித மாதலருமறைக ளொன்றென்னா
தத்துவித மென்றறையு மாங்கு. (௩)

இவ்வெண்பா வேதத்திற்கூறப்பட்டுள்ள அத்துவிதம் என்னும் சொல்லின் உண்மைப்பொருளை உதாரணவாயிலாக விளக்கி, இறைவன் உயிர்களோடு "அவையே தானேயாய்" (அதாவது பேதாபேதமாய்) நிற்கும் முறைமையை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) பண்ணையும் ஓசையும்போல=பண்ணும் அதனின் வேறன்றாயெண்ணப்படும் இசையும்போலவும்—பழமதுவும் எண்ணும் சுவையும்போல்=பழமும் அதனின் வேறன்றாயெண்ணப்படும் சுவையும்போலவும்—எங்கும் ஆம் அண்ணல் தாள்=எங்கும் வியாபகமாயிருக்கும் முதல்வன் திருவருள்—அத்துவிதம் ஆதல்=உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்—அருமறைகள் ஒன்று என்னாது=அரிய வேதங்கள் ஏகம் என்று கூறுவதோடொழியாது—அத்துவிதம்

என்று ஆங்கு அறையும்—அத்துவிதம் என்றும் அவ்விடங்களிற் கூறும். (எ-று.)

அதாவது, வேதமானது பதிப்பொருள் ஒன்றே என்பதனை ஏகம் என்னுஞ் சொல்லாலும், அது உயிர்களோடு இரண்டறக்கலந்து நிற்றலை அத்துவிதம் என்னும் சொல்லாலும் விளக்கிற்றென்பதாம். இதனால் வேதத்திற் கூறப்பட்ட "ஏகம், அத்துவிதம்" என்னுஞ் சொற்களுக்குப் பொருள் "பிரமப்பொருள் ஒன்றேயுளது; இரண்டாவது பொருளில்லை" என்று கூறும் மாயாவாதக்கொள்கை மறுக்கப்பட்டது. (இதனை வேறோரிடத்தில் விரித்துக்கூறுவோம்.)

உதாரண வெண்பா.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றி
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று. (ச)

இச்சூத்திரத்தின் முதன் மூன்று உதாரண வெண்பாக்களுள் முதல் வெண்பாவினால் முதல்வன் உயிர்களோடு "அவையேயாய்" (அபேதமாய்) நிற்றலையும், இரண்டாவது வெண்பாவினால் "தானேயாய்" (பேதமாய்) நிற்றலையும், மூன்றாவது வெண்பாவினால் "அவையே தானேயாய்" (பேதாபேதமாய்) நிற்றலையும், வெவ்வேறு உவமைகளால் விளக்கி, இப்போது நான்காவது வெண்பாவினால் முதல்வன் அம்மூவகை யியல்பையும் ஒருங்கே யுடையவனாயிருத்தலை ஒரு உவமையால் விளக்குகின்றார்.

(இ-ள்.) உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல்—அரக்கை யுருக்கி அதனோடுசேர்த்து அணைத்த கற்பொடியானது அவ்வரக்கினோடு வேறறக்கலந்து நீக்கமின்றி நிற்றல்போல்—உடங்கு இயைந்து பிரிப்பு இன்றி நின்று—(முதல்வன் உயிர்களோடு) ஒருங்குகூடி நீக்கமின்றி உடனாய் நிற்றலால்—தானே உலகாம்—தானேயாம், உலகேயாம் தானேயுலகேயாம். (அதாவது பேதமும், அபேதமும் பேதாபேதமுமாம்). (ஆனால் "யானே யெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன்" என்று உயிர்களும் தாம் உணர்ந்த அநுபவத்தைக் கூறுமென வேதாகமங்கள் முழங்குகின்றனவே, அதனால் உயிர்களும் முதல்வன்போலவே அபேதமாயும், பேதமாயும், உடனாயும் நிற்கும் இயல்பையுடையனவோ என்னில் அப்படியன்று.) தமியேன் உளம்புகுதல்—அம்முதல்வன் பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய் நின்ற என் உள்ளத்தில் சோகம் பாவனையாற்புகுந்து, வேற்றுமையின்றித்

தோன்றலால்—யானே உலகு என்பன் இன்று—யானே உலகெல்லாம் என்பேனுயினேன் இம்முத்திகாலத்து (ஆகையால் உயிர்களும் அவ்வாறு நிற்கும் இயல்புடையன வன்றும்.) (எ-று.)

கலப்பாய் நிற்றலால் உலகேயாம் என்பார் "உடங்கியைந்து" எனவும், பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாம் என்பார் "நின்று" எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாம் என்பார் பிரிப்பின்றி எனவுங்கூறினர்.

சிவபெருமான் உலகுயிர்களோடு தானேயாயும் வேறேயாயும் உடனும் நிற்றலைத் தமிழ்வேதம்

> ஈருய்முத லொன்றுயிரு பெண்ணாண் குணமூன்றுய்
> மாறுமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
> யாறுர்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானும்
> வேறுயுட னுனிடம் வீழிம் மிழலையே

என்று முழங்குகின்றது.

"அரக்கினோடுசேர்ந்த கற்பூரணமானது அரக்கினியல்பை யடைந்தவாறுபோல, எனது ஆன்மாவிற் சிவபெருமானைக்கண்டு இவரை உலகமேயாயுள்ளார் என்று கூறுகின்றேன்" என்று ஞானவரண பாஷ்யத்திற் கூறப்பட்டது.

நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன் என்றும் நான் பிரமமாயிருக்கின்றேன் என்று எவன் அறிகின்றுனே அவன் இவையெல்லாம் ஆகின்றுன் என்றும் வாமதேவரிஷி கூறினர் என்று பிருகதாரணியம் கூறுகின்றது. காணப்படுவதும் காணப்படாததுமாகிய ஈதெல்லாம் என்னால் வியாபிக்கப்பட்டன; நானே உலகத்துக்குநாதன்; என்னிலிருந்தே அனைத்தும் பிரவர்த்திக்கின்றன; நானே பிரமம்; நானே அநக்ஷரமாக அறியற்பாலன் என்று சர்வ ஞானோத்தரம் உயிர்கள்மேல்வைத்துக் கூறுகின்றது. இவ்வாறு வேதாகமங்கள் பலவிடங்களில் கூறுவதனுல் ஆன்மாக்களும் சிவபெருமானைப்போலவே அபேதமாயும் உடனும் நிற்கும் இயல்பினையுடையனவோவெனில், அப்படியன்று. பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய்நின்ற ஆன்மாக்களின் அகத்தில் சோகம் பாவனையெனப்படும் சிவோகம் பாவனையால் சிவபெருமான் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றுதலால் அவ்வாறு கூறநேர்ந்ததென்க.

ஆனுல், வேதாகமங்களில் "பிரமாகம்" (அதாவது பிரமம் நான்) என்றும், "சிவோகம்" (அதாவது சிவன் நான்) என்றும் அத்துவித பாவனை செய்யும்படி விதிக்கப்பட்டிருத்தல் யாது காரணத்தாலெனின்

கருடனும் மாந்திரிகனும் வெவ்வேறாயிருந்தும் கருடோகம் என்னும் அத்துவித பாவனையானது விடநிவர்த்தியின்பொருட்டு வேண்டப்படுதல்போல், பிரமப்பொருளாகிய சிவபெருமானும் ஆன்மாவும் வெவ்வேறு பொருள்களாயிருந்தும் ஆன்மாக்கள் மலநிவர்த்தியடைந்து பரசிவத்துவம் எய்துமாறு வேதாகமங்களில் அத்துவிதபாவனை விதிக்கப்பட்டதென்க.

இவ்வதிகரணத்தால், முதல்வனும் உயிர்களும் "பொற்பணிபோல் அபேதம்" என்று ஏகான்மவாதிகளும், "இருளும் ஒளியும்போல் பேதம்" என்று மத்துவரும் "சொல்லும் பொருளும்போல் பேதாபேதம்" என்று வைணவர்களும் பிணங்கிக்கூறுவதைமறுத்து, முதல்வனும் உயிர்களும் "உடல் உயிர்போல் அபேதமும்" "கண்ணும் கதிரவன்போல்பேதமும்" "அறிவும் கண்ணொளியும்போல் பேதாபேதமும்" ஆகிய இம்மூவகை இயல்போடும் நிற்றலாகிய அத்துவித உண்மை சித்தாந்தஞ் செய்யப்பட்டது. இதனை உமாபதிசிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த சிவப்பிரகாசத்துள்ளும்

புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப் புகழளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற் பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்கனறி வொளிபோற் பிரிவருமத் துவித மாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்.

என்று கூறியிருத்தலாலும் தெளிக.

(இன்னும்வரும்.)

## இராவணன்கணேசமூர்த்தியைப்பூசித்த சரித்திரம்.

முன்னொருகாலத்தில் இலங்கைக் கோமானாகிய இராவணன் ஊழிதோறூழியுயர்ந்து வளரும் திருக்கைலைமலையின் சாரலையடைந்து, சிவபெருமானை நோக்கி மிகவும் அரியதவமிழைத்தனன். சிவபெருமான் அவன் தவத்திற்கிரங்கி அவன்முன் தோன்றியருளினர். இராவணன் அவரைத்தரிசித்து, தன் தவம் பலித்ததென்று அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து, ஆனந்தக்கூத்தாடி, பலமுறையும் சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி கண்கள் ஆனந்தவருவிசொரியவும் உரோமம் சிலிர்ப்பவும், உடல்புளகங்கொள்ளவும் வேதாகமங்களால் தோத்திரம் செய்து நின்றான். சிவபெருமான் அவனை நோக்கி, "இராவணா, நாம் உன் தவத்திற்கு மகிழ்ந்தோம். நீ விரும்பும் வரம் யாது?" என்றனர். பரமானந்தப் பரம்பொருளாகிய இறைவனார் அவ்வாறு வினவுதலும்,

இராவணன் என்றும் இறவாத இன்ப அன்புவேண்டுவதைவிட்டு, மின்னலைப்போல் நிலையற்று மாயாகாரியமாய்த்தோன்றி யழிவதாகிய உலக வாழ்க்கையைப் பெரிதென நினைந்து, தான் எப்போதும் இன்புறுவானாவும் தேவர்களுக்கு இடுக்கண் விளைக்கவும் விரும்பி, சிவபெருமானை நோக்கி "என்னிறைவனே, சொர்க்காதி தேவலோகங்கள் அழியினும் என் இலங்காபுரியழியாமல் என்றும் நிலைபெற்றிருக்க வரந்தந்தருளல் வேண்டும்" என்றனன். அவன் தமது திருவடிகளில் பத்திசெய்பவனுயிருந்தும் மாயையால் மயங்கி அவ்வரத்தைக் கேட்டானுகையால், சிவபெருமான் புன்னகைசெய்து, அவனிடத்தில் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து, "இராவணு, நீ இச் சிவலிங்கத்தைத் தரையில் வைக்காமலும், வாகனமேறிச் செல்லாமலும் சுத்தியாகவும் பத்தியாகவும் கொண்டுபோய் உன் இலங்காபுரியில் பிரதிட்டைசெய்வையேல் உன்விருப்பத்தின்படி இலங்கைமாநகர் என்றும் அழியாமல் நிலையுற்று நிலவும்" என்றுகூறி மறைந்தருளினர்.

இராவணன் தன் எண்ணம்பலித்ததென்று மிக மகிழ்ச்சியடைந்தவனுய், அச்சிவலிங்கத்தைக் கரத்திலேந்தி மிகவிரைவாய் இலங்கையை நோக்கிச்செல்வானுயினுன். அதனைத் தேவேந்திரன் அறிந்து, அச்சிவலிங்கப் பிரதிட்டையால் இலங்கை யழிவின்றி நிலைபெறுமாயின் சொர்க்கம்முதலிய தேவலோகங்கள் இன்பமனுபவிக்கும் போகபூமிகளாயிருக்கும் நிலைமாறி அசுரர்களின் கொடுமையால் துன்பம் அனுபவிக்கும் நரகபூமிகளாய் விடுமென்று பயந்து, முப்பத்து முக்கோடி தேவர்கள் தன்னைப் புடைசூழச்சென்று திருக்கயிலையையடைந்து முதற்கோபுரவாயிலில் சிவகணத்தலைவராய் வீற்றிருந்தருளிய விநாயகக்கடவுளின் திருவடிகளில்வீழ்ந்து வணங்கித் தனது குறையைச்சொல்லி முறையிட்டனன். யார் எக்கடவுளை வணங்கினும் முதலில் விநாயகக் கடவுளை வணங்கவேண்டுமென்பது வேதாகமவிதி யாகையாலும், விநாயகக்கடவுள் அவ்விதிவழி யொழுகுவோர்களின் இடையூறுகளை நீக்குதலும், ஒழுகாதவர்களுக்கு இடையூறு விளைத்தலும் நியதியாதலினுலும், இராவணன் இவ்வேதவிதியை மறந்து விநாயகபூசை செய்யாமல் இலங்கைக்குத் திரும்பிப் பிரயாணமாயினுனுதலாலும், அவன் தேவர்களுக்கு இடுக்கண் விளைப்பது கருதிச் சிவபெருமானிடம் வரம்பெற்றுச் சென்றுனுதலினுலும், துஷ்டநிக்கிரமும் சிட்டபரிபாலனமும் செய்தல் அருண்முறையாகையாலும், விநாயகக்கடவுள் இராவணனுக்கு இடையூறு விளைவித்துத் தேவர்களை இரட்சிக்கவிரும்பி, அவன் வயிற்றில் சிறுநீர் அதிகமாய்ச் சுரக்கும்படிச் சங்கற்பித்தனர். அதனுல் இரா

வணன் சலோபாதைமேலிட்டு கையிற் சிவலிங்கம் வைத்திருந்ததனால் அதைக் கீழேவைக்கமாட்டாமலும், அதைக் கையில்வைத்துக்கொண்டு ஜலஸ்பரிசம் செய்யமாட்டாமலும் இலங்கையை நோக்கி அதிவிரைவாய்ச்செல்ல யத்தனித்தான். வயிற்றில் சிறுநீர் பின்னும் அதிகமாகப்பெருகிவிடவே அடிபெயர்த்து வைக்கவும் இயலாதவனாய் பரிதபித்து, ஐயோ, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்போவதுபோல், மிகவும் தவஞ்செய்து அரிதிற் பெற்றவரம் அழிந்துவிடும்போற் காணப்படுகின்றதே, என்செய்வேன் என்று சொல்லி வருந்தினான். அச்சமயத்தில் விநாயகக்கடவுள் ஒரு பிராம்மணப் பிள்ளையைப்போல் திருமேனிகொண்டு அவன் முன் தோன்றினார்.

இராவணன் அவரைப்பார்த்துச் சந்தோஷங்கொண்டு மிக இனிய உபசாரமொழிகளைக்கூறி "ஐயா, பிராமணப்பிள்ளையாரே, எனக்குச் சலோபாதை மேலிட்டிருக்கிறது. அதையடக்க என்னாலியலவில்லை. என்கையில் சிவலிங்கம் இருப்பதனால் இதை வைத்துக்கொண்டு ஜலஸ்பரிசம் செய்யலாகாது. இதைத்தரையிலும் வைக்கலாகாது. ஆதலால் நான் ஜலஸ்பரிசம் செய்து திரும்பிவருமளவும் கருணைகூர்ந்து இதை உமது கையில்வைத்திரும்" என்றான். விநாயகக்கடவுள் அவனை நோக்கி "ஐயா நீர் யார்?" என்றார். அவன் "நான்தான் இலங்காதிபதி; தேவர்களும் வந்துவணங்கும் இராவணேசுவரன்" என்றான். விநாயகக்கடவுள் "அப்படியானால் இச்சிவலிங்கம் உனக்கு எப்படி கிடைத்தது. இதை எங்கே கொண்டுபோகிறீர்? இதின் மகிமையாது?. இவைகளை விஸ்தாரமாக எனக்கெடுத்துச்சொல்லும்" என்றனர். இராவணன் "ஐயா, நான் சலோபாதையைப் பொறுக்கமாட்டாமல் சற்று நேரம் இதைவைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டால் பல கேள்விகளைக்கேட்டுக் காலம்போக்குகிறீர். இச்சிவலிங்கத்தின் பெருமை அளவிடற்கரியது. அதை இப்போது சொல்ல நேரமில்லை. ஜலஸ்பரிசம் செய்துவந்த பிறகு அவைகளைச்சொல்வேன்" என்றான். விநாயகக்கடவுள் "ஐயா தேவர்களும் வந்து வணங்கும் இராவணேசுவராகிய நீரே உமது இருபது கரங்களாலும் வைத்திருக்கமாட்டாத மகிமைவாய்ந்த இச்சிவலிங்கத்தைச் சிறுவனாகிய யான் என் இருகரங்களில் எப்படி வைத்திருப்பேன்" என்றனர். இராவணன், "ஐயா, நீர் இன்னும் தாமதஞ்செய்யின், நான் உமது கண்முன் வயிறுவெடித்துச் சாவேன், ஆதலால் தயைசெய்து சற்றுநேரம் இதை வைத்திரும். நான் விரைவில் வந்து வாங்கிக்கொள்வேன். நீர் அஞ்சவேண்டாம்" என்று தனது பத்துவாயிலுமிருந்த பற்களையெல்லாம் திறந்துகாட்டிக் கெஞ்சினான். கணேசப்

பெருமான் "இராவணேசுவரரே, நீரோ வலிந்து இச்சிவலிங்கத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறீர். எனக்கோ இதின் பெருமை தெரியாது. ஆதலால் நான் இதை எவ்வளவுகாலம் வைத்திருக்கக்கூடுமோ அவ்வளவுகாலம் வைத்திருப்பேன். பிறகு உம்மை ஒருமுறைக்கு மும்முறைகூப்பிட்டும் பார்ப்பேன். அதற்குள் நீர்வந்து இதைவாங்கிக் கொள்ளாவிட்டால் தரையில் வைத்துவிடுவேன். அப்பால் என்மீது குறைசொல்லவேண்டாம்" என்றனர்.

இராவணன் "ஐயரே, நீர் இவ்வளவு உபகாரம்செய்தாற் போதும் இதற்காக உமக்கு நான் மிகவும் நன்றிபாராட்டுவேன்" என்றுகூறி அவர் கையில் சிவலிங்கத்தைக் கொடுத்துவிட்டுப்போய் ஜலஸ்பரிசம் செய்யவாரம்பித்தான். அவன் வயிற்றினின்றும் நீரானது கடல்மடை திறந்தாற்போல் வெளிவரத் தலைப்பட்டு ஓயாமல்பெருகிக் கொண்டிருந்தது. அதைக்கண்டு இராவணன் பிரமைகொண்டு நீர்ப்பெருக்கு ஒரு சிறிதும் குறையவில்லையே, இதென்னவிபரீதம் என்று வருந்தி நிற்கையில் பிள்ளையார் "இராவணேசுவரரே" என்றழைத்தனர். அதைக்கேட்ட மாத்திரத்தில் அவன் வயிற்றிலிருந்த நீரோடு நெருப்பும் விழுந்தது போல் கலங்கினான். "ஐயோ, என்வயிற்றிலிருந்த நீரில் ஒரு சிறிதும் குறைந்ததாகக் காணப்படவில்லையே, இதற்குள் இப் பார்ப்பாரப் பையன் என்னைக் கூப்பிடுகிறானே" என்றுசொல்லி "ஐயா அவசரப்படவேண்டாம், சற்றே பொறுத்திரும். இதோ வந்துவிடுகிறேன்" என்றான். விநாயகக்கடவுள் மறுபடியும், "ஐயா, இலங்காதிபதீ, ஓடிவாரும்" என்றார். இராவணன் "ஐயையோ, என்செய்வேன். இவன் இதற்குள் இரண்டுமுறை அழைத்துவிட்டான். பார்ப்பார்களுக்கு இரக்கமென்பதே இல்லைபோலும்" என்று சொல்லிக்கொண்டு அவர் கூப்பிட்டதைக் கேளாதவன்போல் மௌனமாயிருந்தான். விநாயகர் மறுபடியும் "இராவணேசுவரரே, உம்மை இதோடு மூன்றுமுறை கூப்பிட்டாயிற்று. இச்சிவலிங்கத்தைத் தாங்க இனி என்னாலாகாது. இது என்னைப் பாதலத்திலழுத்திவிடும்போற் காணப்படுகிறது. இக்கணமே வந்து இதை வாங்கிக்கொள்ளும்" என்றனர். இராவணன் அப்போதும் வரமாட்டாமையால் மனங்கலங்கி நிற்கையில், விநாயகக்கடவுள் சிவலிங்கத்தை நிலத்தில் வைத்தனர். உடனே அச்சிவலிங்கமானது "பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பால்" என்னும் வேதவசனத்தின்படியாகவும் முற்காலத்தில் "பிரமனரி யென் றிருவருந்தம் பேதமைப்ரமமியாம் பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க—அரனு ரழலுருவாயங்கே யளவிறந்து—பரமாகிநின்ற" துபோலவும்கீழேழுலகங்களையும் ஊடுருவிநின்றது. அச்சமயத்தில் இராவணனுக்கிருந்த சிறுநீர்ப்பெருக்கும்

நின்றுவிட்டது. இராவணன் சிவலிங்கம் தரையில் வைக்கப்பட்டிருந்ததைப்பார்த்து என்று வருந்தி உடனே ஓடிச்சென்று அதைத் தன் ஒரு கரத்தால் எடுக்க முயன்றான். அது அவன் கைக்கு வரவில்லை. பிறகு இரு கைகளால் எடுக்கமுயன்றான். அப்போதும் அது வரவில்லை. பிறகு தன்து இருபது கரங்களாலும் தன் பலமெல்லாங் காட்டிப் பெயர்க்கமுயன்றான். அப்போது அச்சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து நின்றதேயன்றி ஒரு சிறிதும் பெயரவில்லை. அதனால் அச்சிவலிங்கம் மாபலலிங்கம் என்றும், அது இருக்கும் தலம் கோகர்னம் என்றும் சொல்லப்படுகிறது. சிவலிங்கம் இவ்வாறானமையைக்கண்டு, இராவணன் கோபங்கொண்டு "இந்தப் பார்ப்பாரப்பையன் இவ்வளவு மகிமைவாய்ந்த இச்சிவலிங்கத்தை இன்னும் சற்றுநேரமாமாவது வைத்திராமல் தரையில்வைத்து விட்டானல்லவா!, இவன் மிகவும் கன்னெஞ்சன், இரக்கம் சற்றுமில்லாதவன், கொடியவன் இவனைச் சும்மாவிடலாகாது" என்றுசொல்லி ஓடிச்சென்று, அவர் சிரத்தில் ஓங்கி ஒரு குட்டுக்குட்டினான்.

விநாயகக்கடவுள் உடனே பிராமணப்பிள்ளை உருவத்தைமறைத்து, யானைமுகம்தோன்ற நின்று அவனோடு போர்புரிந்து அவன் இறுமாப்பை யடக்கத் திருவுளங்கொண்டு, பந்தாடுவதுபோல் அவனைத் தூக்கி எறிந்து விளையாடினர். அதனால் அவன் வலியிழந்து மிகவும் நொந்து "அபயம், அபயம், அடியேன்செய்த அபராதத்தைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். விநாயகக்கடவுள் அவனோடு போர்புரிவதை நிறுத்தி, கருணைக்கண் வைத்தலும், அவன் அவ்வாறு தன்னைத்தண்டித்தவர் தனக்குச் சிவலிங்கம் தந்தருளிய சிவபெருமானின் வேறாகாத விநாயகக்கடவுளேயென்பதையும், தன் வல்லமையால் சிவலிங்கம் குழைந்ததென்று தான் தருக்கிநின்றமையால் தன்வலி இத்துணைத்தெனக்காட்டித் தன் தருக்கை நீக்குமாறு விநாயகக்கடவுள் அவ்வாறு ஆடல் புரிந்தனர் என்றும் உணர்ந்து, அவரைப் பன்முறையும் வீழ்ந்து நமஸ்கரித்து வேதவசனங்களால் துதித்தனன். தம்மை வணங்குவார்க்கு அறக்கருணையும் வணங்காதவர்க்கு மறக்கருணையும் செய்து ஆட்கொள்ளும் விநாயகக்கடவுள் அவனுக்கு அறக்கருணைசெய்து வேண்டிய வரங்களைக் கொடுத்தனர். இராவணன் இறுமாப்புநீங்கி, தன்வலியையும், குற்றத்தையும் நொந்து விநாயகர் திருவடிகளைத் தியானித்துக்கொண்டேபோய் இலங்காபுரியையடைந்தான்.

## அக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றேல்.

நமதுமெய்கண்டநாதர், வேதத்தில் முதல்வனும் உயிர்களும் ஏகம் என்று கூறியிருக்கவும், முதல்வனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களென்று கூறுதல் அதற்கு முரணன்றோ வென்பார்க்கு, வேதம் ஏகம் என்று கூறுவதின் கருத்து இத்தன்மைத்தென விளக்கவேண்டி

"அக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

என்றருளிச் செய்தனர். இவ்வுண்மையை விளக்கவேண்டியே அருணந்திசிவாசாரியசுவாமிகளும் தமது சிவஞானசித்தியாரில்

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்றுபன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
லன்றவை பதிதா னொன்றென் றறையுமக் கரங்கடோறுஞ்
சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே

என்றருளிச் செய்தனர். உமாபதிசிவாசாரியசுவாமிகளும் தமது திருவருட் பயனில்,

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து

என்றருளிச்செய்தனர். திருவதிகை மனவாசகங்கடந்தாரும் தமது உண்மைவிளக்கத்தில்

அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ—னெக்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோது நாடு.

என்றருளிச்செய்தனர்.

சைவசந்தான குரவர்களாகிய இவர்கள் மாத்திரமன்றி, பலசமயத்தாரும் பொதுநூலெனக் கொண்டாடும் திருக்குறள் செய்தருளிய திருவள்ளுவ நாயனாரும்

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்றருளிச் செய்தனர். இவர்களெல்லோரும் அகரவுயிரைக் கடவுளுக்கு உவமையாக வெடுத்துக்கூறினார்கள். ஆதலால், அகரவுயிரின் இலக்கணங்கள்யாவை, அவ்விலக்கணங்கள் கடவுளின் இலக்கணங்களோடு எவ்வாறு பொருந்துவன என்பவற்றை யாராய்வோம்.

உலகத்திலுள்ள பாஷைகள் பலவற்றிலும், அகரமானது எழுத்துகளின் வரிசைக்கிரமத்தில் முதற்கண் வைக்கப்பட்டிருத்தலால், அது பொதுவாய் முதலெழுத்தென்று சொல்லப்படும். ஆனால், தமிழ்ப்பாஷையில் அது முதலில் வைக்கப்பட்ட ஒருகாரணத்தான் மாத்திரமன்றி, கடவுள் சேதனம் அசேதனம் என்னும் இருவகைப் பிரபஞ்சத்தின் கண்ணும் அத்துவிதமாய்க்கலந்து நிற்றல்போல், மற்ற உயிர்களோடும் மெய்களோடும் அத்துவிதமாய்க் கலந்து நிற்றலாலும், முதலெழுத்தென்னப்பட்டது. முதல் என்னுஞ் சொல்லுக்குக் கடவுள் என்பதொரு பொருள். ஆதலால் முதலெழுத்தென்பது கடவுளெழுத்து என்றும் பொருள்படும்.

எழுத்துகள் முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகைப்படும். உயிரும் மெய்யும் முதலெழுத்தும், உயிர்மெய் முதலியன சார்பெழுத்துமாம். உயிரும் மெய்யும் கூடுவதனாலும், இவற்றின் விகாரத்தாலும் சார்பெழுத்துண்டாவதனால், உயிர்மெய் முதலிய சார்பெழுத்துகளை நோக்க, உயிரும் மெய்யும் முதலெழுத்துகள் எனப்படும். அவ்வாறே அகரத்தை முதலாகக்கொண்டு மற்ற உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் பிறப்பதனால் அகர உயிரானது மற்றெல்லா வெழுத்துகளுக்கும் முதலெழுத்தென்று சொல்லப்படும்.

இனி அகரத்தை முதலாகக்கொண்டு மற்றவெழுத்துகள் உண்டாவதை விளக்குவாம். பரிமேலழகர் தாம்செய்த திருக்குறள் முதற்பா உரையில் "அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க" என்றருளிச்செய்தனர். இதனால் அகரமானது நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலும், மற்றவெழுத்துகள் விகாரத்தாற் பிறத்தலும் பெறப்பட்டது. நாதம் என்பது சுத்தமாயா விருத்தியாகிய பரசரீரத்தினின்றுந் தோன்றும் வியஞ்சகவொலியாம். அது உயிர்களின் அகத்தே அகரமயமாய்நின்று ஒலிக்கும் இயல்புடையது. சந்திரகிரணம் கூடும்போது சமுத்திரம் உப்பி அதனால் ஒலியுண்டாவதுபோல், சிவபரம்பொருள் சத்தியுடன் கூடி, ஞானக்கிரியா சொரூபமாய் நின்று பிரபஞ்ச சிருட்டி செய்யத்தொடங்கி, சுத்தமாயையை யதிட்டிக்குஞ் சமயத்தில் ஆன்மாக்களின் ஞானப்பிரகாசத்திற் கேதுவாயிருக்கும் நாதமானது தோன்றும். அதிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் நான்கு வாக்குகளும் அகரமுதலாகிய அக்கரங்களும் விந்து முதலாகிய

தத்துவங்களும் தோன்றி பிரபஞ்சமுண்டாம். அவ்வியஞ்சக வொலியே பிரணவமும், பஞ்சாக்கர மகாமந்திரமுமாம். அதனால் அகாரத்தைக்கொண்டே எல்லாவெழுத்துகளும் தோன்றியியங்கும் என்பது பெறப்பட்டது. ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியாரும் "மெய்யினியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திர உரையில் "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்பமுடிந்தது" எனக் கூறியதும் இக்கருத்துப்பற்றியே யாம்.

பிற எழுத்துக்களெல்லாம் முயற்சி முதலியவற்றால் விகாரமெய்தி வழியும், அகரமின்றி இயங்கப்பெறுமையைத் தொல்காப்பியத்தாலும் நன்குணரலாம். அதனை விளக்கும் தொல்காப்பியச் சூத்திரங்களுள் சிலவருமாறு:—

1. அ ஆ ஆயிரண்டங்காந்தியலும்

இவை அங்காத்தலையுடையன வாய்ப்பிறக்கு மென்பதாம்.

2. இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பாலைந்தும் அவற்றோரன்ன—அவைதாம்
அண்பன் முதனா விளிம் புறலுடைய

இவை வாய்திறத்தலுடனே அண்பல்லை நாக்கடியினது ஓரமான்து பொருந்தப் பிறக்குமென்பதாம்.

3. உ ஊ ஒ ஓ ஔ வென விசைக்கும்
அப்பாலைந்து மிதழ்குவிந்தியலும்

இவை வாய்திறத்தலுடனே உதடுகளின் குவிதலாற் பிறக்குமென்பதாம்.

4. ககார ஙகாரம் முதனாவண்ணம்

இவை நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்தப் பிறக்குமென்பதாம்.

இப்படியே பிறவெழுத்துகளும் வரும். இவற்றால் அகரமானது வாயைத்திறத்தல் மாத்திரையாய்ப் பிறக்குமென்பதும், ஏனையவெழுத்துகளெல்லாம் வாயைத்திறத்தலோடு குவித்தல் முதலிய முயற்சிகளால் பிறக்கும் என்பதும் பெறப்படும்.

(இன்னும் வரும்.)

# வைதிகசிவஞானபோதம்

## அவைதிக சிவஞானபோதமாக ஆக்கப்பட்டமை.

தூத்துக்குடி எனப்படும் திருமந்திரநகரத்து மெஸ்ஸர்ஸ. ஏ. மா. கம்பெனியார் வேண்டுகோட்பிரகாரம் தஞ்சை ம-ா-ா-ஸ்ரீ வி. குப்புஸ்வாமிராஜு அவர்களாற் றமிழுரையேறப்பெற்ற வடமொழிச்சிவஞானபோதம் எங்ஙனம் அவைதிகமாக ஆக்கப்பட்டதென்பதை ஆராய்குதும்.

ராஜு அவர்கள் தமது புஸ்தகத்து முகவுரையின் மூன்றும் பக்கத்தில்,

𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍋𑌽𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑍋𑌽𑌶𑍍𑌰𑍌𑌤𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌯𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌇𑌤𑌰𑍋 𑌮𑌤𑌃।
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌦𑌶𑌧𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌧𑌾 𑌪𑍁𑌨𑌃।
𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌭𑌿𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌯𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑌤𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃॥

சைவாகமோபி த்விவிதஃ ச்ரௌதோச்ரௌதச்ச ஸம்ஸ்ம்ருதஃ।
ச்ருதிசாரமயஃ ச்ரௌதஃ ஸ்வதந்த்ர இதரோ மதஃ।
ச்வதந்த்ரோ தசதா பூர்வம் ததாஷ்டாதசதா புநஃ।
காமிகாதிசமாக்யாபிஸ் சித்தஸ் சித்தாந்தசம்ஞிதஃ।
ச்ருதிசார மயோயஸ்து சதகோடி ப்ரவிஸ்தரஃ॥

"சைவாகமமும் சிரௌதம் அசிரௌதம் என இருவகையாய்க் கருதப்படுகின்றது; சுருதிசாரமயமானது சிரௌதமாம்; சுவதந்திரமானது அசிரௌதமாம்; சுவதந்திரம் பூருவம் பத்துவகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடியும் பதினெண்வகையாகவும், காமிகமுதலிய பெயர்களாற் சித்தித்துள்ளதாம்; சுருதிசாரமயம் எதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதாம்" என்று சிவபுராண வாயுசம்ஹிதா பூருவபாகத்து உ அ-ம் அத்தியாய சுலோகங்களை மொழிபெயர்த்தார்கள்.

1. இங்கே அவர்கள் விடுத்த மொழிபெயர்ப்பினாற் சுருதிசாரமாயுள்ள ஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாம் என்பதும், அது சிரௌதமாம் என்பதும், எனவே, வைதிகமாம் என்பதும், இந்த நூறு கோடி விரிவினுள்ளே காமிகமுதலிய இருபத்தெட்டு ஆகமங்கள் சேராதன என்பதும் பெறப்பட்டன.

2. இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப்படும். சிவபேதம் காமிகமுதற் சுப்பிரபேதம் இறுதியாகிய பத்துமாம்; உருத்திரபேதம் விஜயமுதல் வாதுளம் இறுதியாகிய பதினெட்டுமாம். ஆகலின், வாயுசம்ஹிதை சித்தாந்தம் எனப் பெயரிய இருபத்தெட்டு ஆகமங்களையும் முன்னர்ப் பத்தும், பின்னர்ப் பதினெட்டுமென்று வகுத்துக் கூறியதாம் என்க.

3. ராஜ—அவர்கள் மொழிபெயர்ப்புப் பிரகாரம் காமிகமுதல் வாதுளம் இறுதியாகிய சுவதந்திரம் இருபத்தெட்டும் அசிரௌதமாய் முடிந்தன.

4. முடியவே, இருபத்தெட்டு ஆகமங்களுள்ளே பதினுருவதாயும், உருத்திரபேதம் பதினெட்டனுள்ளே ஆருவதாயுமுள்ள இரௌரவாகமம் அசிரௌதமாய், எனவே, அவைதிகமாய் முற்றியது. முற்றவே; அந்த இரௌர வாகமத்துள் அடங்கிய சிவஞானபோதமும் அவைதிகமாய், எனவே, க்ஷபணர் பௌத்தர் முதலாயினோர்களுடைய நூல்கள் போல வேதபாஹ்யமாயன்றோ முடிந்தது.

5. அவர்கள் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களை வேதசாரமென்று கூறி, அதனை நிரூபித்தற்கு 3,4,5,6—ம் பக்கங்களிலே விடுத்த காமிகாகம சுலோகமேனும், சூதசம்ஹிதா சுலோகமேனும், நீலகண்ட சைவபாஷ்யவசனமேனும், காலமாதவீயவசனமேனும் அவர்களது வாயுசம்ஹிதைத் தமிழுரையினுல் அவைதிகம் எனப் பெறப்பட்ட காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும்(அவைதிகமன்றென்று கண்டித்து) வைதிகம் என்று ஸ்தாபித்ததா? இல்லை! இல்லை!!

6. இந்நூலுக்கு உரைசெய்தற்கு முன் முகவுரையிலேயே இத்துணை அநர்த்தஞ் செய்தார்களாயின், இவர்கள் நூலகத்து எத்துணை அநர்த்தஞ் செய்திருப்பார்கள் என்பதை அன்பர்கள் யோசித்துணர்வார்களாக.

7. இவர்களைத்தாமா ஒருவர் ஆங்கிலேய முகவுரையிலே சிவஞான சுவாமிகளினுஞ் சிறந்த மகாபாண்டித்தியமுடையவர்கள் என்றும்,

மற்ருெருவர்,

> நன்று விளங்கு நல்சிவ ஞான
> போத மதற்குப் பொருளறி யாமல்
> ஏத நிறைய வியற்றினர் பலருரை
> அவ்வுரை மக்கட் கரணு காது
> வெவ்விய தீமை விளைத்து.........
> ..............................நெறிபெற
> விழைவோர் தமக்கு விருந்து போல்வதாம்.

"சிவஞானபோதத்தின் பொருளறியாமல், அதற்குக் குற்றம் நிறையச் (சிவஞானசுவாமிகள்முதலிய) பலர் உரைகள் இயற்றினார்கள்; அவ்வுரைகள் மனிதர்க்கு அரணுகாமற் கொடுந் தீமைகளை விளைத்து (வருவனவாக), (ராஜ-ஆவர்கள் செய்த உரையோ) நன்னெறி பெற விரும்புவோர்க்கு விருந்துபோல்வதாம்." என்றும் வரைந்தார்கள்.

8. ராஜ-அவர்களேனும், முகவுரை கொடுத்த ஐவருள் எவரே னும் அந்த ராஜ-அவர்கள் விடுத்த வாயுசம்ஹிதாத் தமிழுரையினுற் சிவ ஞானபோதம் அவைதிகமன்றேன்று ஸ்தாபிப்பார்களா?

ஆகவே, திருமந்திரநகரத்துக் கம்பெனியார்க்கு ராஜ-அவர்கள் வாயிலாகவாய்த்த இலாபம் அவைதிகசிவஞானபோதமாமன்றி, வை திகசிவஞானபோதமன்றும் என்க.

திருப்பரங்குன்றம்,
21—1—1917,

இங்ஙனம்,
ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர்.

---

## சிதம்பர தத்துவார்த்தம்.

(185-வது பக்கத்தொடர்ச்சி.)

சிதம்பரதத்துவார்த்தமானது அநுபூதிமான்களாகிய சிவஞானி களுக்கேயன்றி ஏனையோர்க்கு உணர்வரியதென்பதும், சிதம்பரம் என் னும் சொல்லின் பொருளும், அதின் வேறு பெயர்களும், அப்பெயர்க ளின் காரணங்களும், சிதம்பரம் சிவபெருமானுருடைய அட்டமூர்த் தங்களுள் ஒன்றாகிய ஆகாசமாமென்பதும், சர்வபிரபஞ்சமும் சிதம்ப ரத்தில் தோன்றியொடுங்கும் என்பதும், சிதம்பர இரகசியம் என்பது சிவபெருமானுடைய சொரூப நிலையையும், நடராஜவடிவம் அவருடை ய தடத்தநிலையையும் விளக்குமென்பதும், பஞ்சாக்கரப்படியின் உண் மையும், இச்சைவத்தருவின் இரண்டாமலரின் பன்னிரண்டாமிதழில் ஒருசிறிது விளக்கப்பட்டன. இனி, சிவபெருமானுடைய தடத்தநிலை யையுணர்த்தும் ஸ்ரீ நடராஜவடிவமானது சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தி யங்களை யுணர்த்தி நிற்றலை விளக்குவாம்.

### உண்மைவிளக்கம்.

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

## சிதம்பர மும்மணிக்கோவை.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு
நாமநீர் வரைப்பி னிலவு லகமு
மேனைய புவனமு மெண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்தோர் கரமே
யீட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
யடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே.

ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய ஒரு திருக்கரத்திலிருக்கும் தமருகமானது சிருட்டித்தொழிலையும், அபயகரமானது காத்தற்றொழிலையும், வேறொரு திருக்கரத்திலிருக்கும் அக்கினியானது சங்காரத்தொழிலையும், ஊன்றிய திருவடியானது திரோபவத்தையும், தூக்கியதிருவடி அனுக்கிரகத்தையும் உணர்த்தும்.

இவற்றுள், சிருட்டியென்பது ஆன்மாக்களுக்கு மாயையைக் கொண்டு தனுகரண புவனபோகங்களை யுண்டாக்குதலாம். சிவபெருமான் தமது அருட்சத்தியோடுங்கூடி பிரபஞ்ச சிருட்டி செய்யத் தொடங்கி சுத்தமாயையை யதிட்டிக்குஞ் சமயத்தில் அதினின்றும் முதலில் உண்டாகும் தத்துவம் நாததத்துவம் என்னப்படும். அது அகார உகார மகாரங்களாலாகிய ஓம் என்னும் பிரணவரூபமாயிருக்கும் ஞானவொலியாம். அவ்வொலிவடிவாகிய நாததத்துவத்திலிருந்தேனைய தத்துவங்களும், அத்தத்துவரூபமாகிய சகல பிரபஞ்சமும் உண்டாம். அவ்வொலி (உடுக்கு என்னும்) தமருகத்தில் கேட்கப்படுவதனால் சிருட்டித்தொழிலைத் தமருகம் உணர்த்தும்.

அபயகரமானது ஆணவமலப் பகையால் விழுங்கப்பட்டு அறிவும் ஆற்றலுங்குன்றி வருந்திக்கிடக்கும் ஆன்மாக்களுக்கு அபயம் தந்து, தேகாதிகளைக்கொடுத்து அறிவாற்றல்களை விளக்கி, வினைப்போகங்களை யுண்பித்து, ஆணவமலப் பகையின் வலியையடக்கி இரட்சித்தலையறிவுறுத்தும்.

அக்கினியேந்திய திருக்கரம் சர்வசங்காரகாலத்தில் சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றும் ஒரு சிறு நெருப்புப் பொறியால் சர்வலோகங்களையுஞ்சுட்டு நீறாக்குதலாகிய சங்காரத் தொழிலை யுணர்த்தும். எண்ணிறந்தகாலம் எண்ணிறந்த பிறவிகளெடுத்துழன்று களைத்திருக்கும் ஆன்மாக்களுக்கு இளைப்பாறு

தலைத் தரவேண்டி, சிருட்டிகாலத்தில் மாயையிலிருந்து தோற்றுவித்த பிரபஞ்சத்தை மீளவும் அம்மாயையில் ஒடுக்குதல் சங்காரம் எனப்படும். காரிய ரூபமாகிய பொருள்களைமீண்டும் முன்போல் காரணரூபமாக மாற்றுதற்கு நெருப்புவேண்டும். பொன்னாகிய காரணத்திலிருந்து உண்டாகிய ஆபரணமாகிய காரியத்தை நெருப்பிலிட்டால் முன்போல் காரணமாகிய பொன்னாகிறது. அதுபோலவே காரியரூபமாகிய எப்பொருளும் நெருப்பிலிடப்பட்டால் காரணரூபமாய் மாறிவிடும். நீரை நெருப்பிலிட்டெரித்தால் அது நீரின் தன்மைவிட்டு ஆவியின் தன்மையையடைகிறது. அந்த ஆவியானது குளிர்ந்தவிடத்து மீண்டும் நீராய் மாறுகிறது. அவ்வாறே "வித்துண்டாமூலமுளைத்தவா" என்னும் சிவஞானபோத முதற்சூத்திரத்தின் மூன்றாவது உதாரணவெண்பாவிற் கூறியபடி குளிர்ச்சியால் வித்தினின்றும் முளைதோன்றுவதுபோல் சிவசத்தி சங்கற்பத்தால் மாயையினின்றும் பிரபஞ்சம் தோன்றும். குளிர்ச்சியால் தோன்றிய முளை மீண்டும் வெப்பத்தால் அழிவதுபோல் சிவசத்திசங்கற்பத்தால் அழியும். ஆதலால் நடராஜப்பெருமான் திருக்கரத்திலிருக்கும் அக்கினி சங்காரத்தொழிலை விளக்குமென்ப.

ஊன்றிய திருவடியானது ஆன்மாக்களுக்குக் கன்மநாசம் உண்டாகவேண்டி அவைகளைப் போகத்திலழுத்துதலாகிய திரோபவம் என்னும் தொழிலையுணர்த்தும். ஆன்மாக்களுக்குக் கன்மமலம் இருக்கும் வரையில் முத்திசித்திக்காது. அன்றியும், ஆன்மாக்கள் தாம்செய்த வினைப்பயன்களை யனுபவித்தாலன்றி கன்மநாசம் உண்டாகாது. ஆதலால் சிவபெருமான் அவைகளுக்குக் கன்மநாசம் உண்டாகவேண்டி மறைப்பைக்கொடுத்து, இன்பதுன்பங்களில் அழுந்தி யநுபவிக்கச்செய்கிறார். இதனை "ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்றாட்டுவதற்கு நின்றான்றிய பதமே" என்பதனாலுணர்க.

தூக்கிய திருவடியானது தமது அடியவர்களை யணுகும் யமனை உதைத்து அவர்களைத் தமது திருவடி நீழலில் வைத்தருளச் சித்தமாயிருப்பதைக் காட்டும். அத்திருவடியிலுள்ள குஞ்சிதமானது (வளைவு) அடியவர்களின் சிரசிற் பொருந்து மாறிருத்தல் "தாள்," "தலை" என்னும் சொற்களிரண்டும் புணர்ந்தபோது "தாடலை" யென்று இரண்டறக்கூடி நிற்றல்போல், அத்திருவடியைச் சேர்ந்தவர்கள் அதனோடு அத்துவிதமாய்க் கலந்துவிடுவர் என்பதையுணர்த்துகின்றது.

(இன்னும்வரும்.)